| | |
|---|---|
| | வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு - வவுனியா<br>துரித விசேட செயற்றிட்டம் க.பொ.த (சாதாரன தரம்) – 2017<br>விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் |
| செயலட்டை -01 | தரம் - 11 |

# தாவர இனப்பெருக்கம்

01. வித்துக்கள் மூலம் இனப்பெருக்கம் செய்வதால் ஏற்படும் அனுகூலங்கள் எவை?
02. மாவித்துக்களின் உறங்குநிலையை நீக்க உகந்த முறை யாது?
03. தரைமேலான முளைத்தலைக் காட்டும் வித்துக்கள் 5 தருக?
04. தரைகீழான முளைத்தலைக் காட்டும் வித்துக்கள் 5 தருக?
05. தக்காளி வித்துக்களின் உறங்குநிலைக்கான முக்கிய காரணம் யாது?
06. வித்து முளைப்பதற்கு அவசியமான காரணிகள் எவை?
07. மாணவன் ஒருவன் 50 நெல் வித்துக்களை முளைக்க வைத்தபோது 7 வித்துக்கள் முளைக்காமல் இருந்ததை அவதானித்தான். இந்தநெல் வித்துக்களின் முளைதிறன் சதவீதம் யாது?
08. றக்டோல்முறை மூலம் வித்துக்களில் எதனைப் பரிசோதிக்கலாம்?
09. வித்துக்களில் உறங்குநிலை காணப்படுவதனால் கிடைக்கும் பிரதான அனுகூலம் யாது?
10. சிலவகை வித்துக்களின் வாழ்தகவு மிகக் குறைவானதாகையால் அவ்வித்துகளைப் பழத்திலிருந்து அப்புறப்படுத்திய உடனேயே நடுதல் வேண்டும். அவ்வாறான வித்துக்கள் 2 தருக?
11. பயிர்ச் செய்கைக்கு தெரிவு செய்யும் வித்துக்களில் இருக்கவேண்டிய மிகக் குறைவான முளைதிறன் வீதம் யாது?
12. நோய்கள் அற்ற நாற்றுக்களைப் பெற மிகஉகந்த இனப்பெருக்க முறை யாது?
13. பன்னிரண்டு மணிநேரம் நீரில் ஊறவிடப்பட்ட பயற்றம் வித்துக்களை ஈரலிப்பான பஞ்சைக் கொண்ட முகவைகள் இரண்டில் சமஅளவில் இட்டு ஒரு முகவையைக் குளிரேற்றியிலும் , மறு முகவையை சாதாரண சூழலிலும் வைத்து நான்கு நாட்களின் பின் அவதானித்த போது குளிரேற்றியில் வைக்கப்பட்ட வித்துக்கள் முளைக்கவில்லை இதற்கான காரணம் யாது?
14. மாணவரொருவர் குரோட்டன் தண்டுத் துண்டங்களை நாட்ட முன்னர் அதிலுள்ள இலைகளை அகற்றினார். அவர் எதற்காக அவ்வாறு செய்தார்?
15. ஒட்டுதல் வெற்றியளிப்பதற்கு ஒட்டுக்கட்டையினதும் ,ஒட்டுக் கிளையினதும் எவ் இழையங்கள் நன்கு பொருந்திக் காணப்படல் வேண்டும்?
16. வித்து முழைத்தல் என்றால் என்ன.? வித்து முளைக்கும் விதங்களைத் தருக?
17. விதைநெல்லில் இருக்கவேண்டிய உச்சஈரப்பதனும், மிகக்குறைந்த முளைதிறனும் உள்ள வீதங்கள் யாது?
18. தாவரத் துண்டங்களின் வேர்விடச் செய்ய பாவிக்கப்படும் ஓமோனின் வர்த்தகப் பெயர் எவை? இரசாயனப் பெயர்கள் எவை?

19. ஒட்டுக்கட்டையாகத் தெரிவுசெய்யப்படும் தாவரம் கொண்டிருக்கவேண்டிய பிரதான இயல்பு யாது?
20. பலஅரும்புகள் கொண்ட ஒட்டுக்கிளை ஒன்றை ஒட்டுக்கட்டையுடன் பொருந்தச் செய்யும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?
21. துண்டு ஒட்டுக்காக எடுக்கப்படும் ஒட்டுமுளையில் எத்தனை அரும்புகள் இருக்கும்?
22. அரும்பொட்டு முறைக்கும், கிளையொட்டு முறைக்கும் இடையிலான பிரதான வேறுபாடுகள் யாது?
23. ஈரவெங்காயப் பயிரைப் பயிரிடப் பயன்படுத்தப்படும் நடுகைப் பொருள் யாது?
24. இலங்கையில் தாவரப் பரம்பரையலகு வளநிலையம் எங்கு அமைந்துள்ளது?
25. “சப்பதில்லா” தாவரமொன்றின் உயரத்தே உள்ள ஒரு கிளையில் வேர்கொள்ளச் செய்வதற்காக நீர் கையாளும் பதிவைத்தல் முறையாது?
26. “குமிழம்” என்னும் இயற்கைப் பதியப்பகுதியின் மூலம் இனப்பெருக்கமடையும் தாவரங்கள் எவை?
27. இஞ்சி,சேம்பு ஆகிய பயிர்களின் பதியமுறை இனப்பெருக்கப் பகுதிகள் எவை?
28. தரைக்கீழ் முளைத்தலைக் காட்டும் இரு வித்திலைத் தாவரம் எது?
29. அன்னாசி,வாழை போன்ற பயிர்களில் கருக்கட்டல் நடைபெறாது பழங்கள் உருவாகின்றன. இத்தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?

30. தாவர ஒட்டுமுறை பற்றிய கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் சரியானவை யாவை?
    - A. அரும்பொட்டின் போது ஒரு அரும்பைக் கொண்ட ஒட்டுமுனையும், கிளையொட்டின் போது பலஅரும்புகள் கொண்ட ஒட்டுமுனையும் பயன்படுத்தப்படும்.
    - B. ஒட்டுதலின் மூலம் எப்போதும் தாய்த் தாவரத்தைவிடச் சிறப்பான இயல்புகள் கொண்டநாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
    - C. ஒட்டுதல் வெற்றியளிப்பதற்கு ஒட்டுக்கிளையினதும், ஒட்டுமுளையினதும் மாறிழையங்கள் பொருத்துவது அத்தியாவசியமாகும்.
    - D. துண்டொன்றின் போது (பச் ஒட்டு) ஒட்டுக்கட்டையிலிருந்து அகற்றப்பட்ட பட்டையின் அளவுக்குச் சமமான ஒட்டுமுளையே பயன்படுத்தப்பட வேண்டும்.

31. கத்தரி, தக்காளி, மிளகாய் ஆகியன நாற்றுமேடையில் வளர்க்கப்பட்டு பின்னரே வயலில் நாட்டப்படும். ஆனால் பீர்க்கு, புடோல், வெண்டி ஆகியன நேரடியாகவே வயலில் நாட்டப்படும். இவ்வாறு இப்பயிர்கள் நாட்டப்படுவதற்கான காரணம் யாது?
32. விவசாயி ஒருவர் தண்டுத் துண்டத்தின் அடிப்பகுதிக்கு“செக்ரோ”எனும் தூள் ஒன்றைப் பூசியபின்னரே அவற்றை நாட்டினார். இதன் மூலம் அவர் எதிர்பார்க்கும் பிரதான அனுகூலம் யாது?

33. “வித்துஉறங்குநிலை” பற்றிய நான்கு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் திருத்தமான கூற்றுக்கள் யாவை?

A. பாகல் விதத்துக்களின் வித்துறையைக் காயப்படுத்தி நாட்டினால் அவை விரைவில் முளைக்கும்.

B. நீர் உட்புகவிடா வித்துறை காணப்படுவதே கொடிதோடை வித்துக்களின் உறங்கு நிலைக்குக் காரணமாகும்.

C. சூடான நீரினுள் அழிழ்த்தி பப்பாசி வித்துக்களின் உறங்குநிலையை நீக்கலாம்.

D. உயிர்ப்பண்புடைய வித்தொன்றுக்கு முளைத்தலுக்கு அவசியமான காரணிகள் கிடைக்கப்பெற்றப் போதிலும் முளைக்காது இருப்பதே உறங்குநிலையாகும்.

34. பின்வரும் கூற்றுக்களில் திருத்தமான கூற்றுக்கள் யாவை?

A. இழையவளர்ப்பு மூலம் தாய்த்தாவர இயல்புகளிலும் உயர்வான இயல்புகள் கொண்ட நாற்றுக்களை பெறமுடியும்.

B. இழையவளர்ப்பு மூலமாக ஒரேதடவையில் அநேகஎண்ணிக்கையான நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

C. இழையவளர்ப்பு மூலம் பெற்ப்படும் நாற்றுக்கள் வைரசுநோய்களால் கூடியஅளவு பாதிக்கக் கூடியது.

D. இழையவளர்ப்பு ஒருபதியமுறை இனப்பெருக்க முறையாகும்.

35. காற்றுப் பதிவைத்தலின் போது வேர்விடச் செய்யஎ திர்பார்க்கும் கிளையில் மரவுரி வட்டமாக அகற்றப்படுவதன் நோக்கம் யாது?

36. பின்வரும் கூற்றுக்களில் திருத்தமான கூற்றுக்கள் எவை?

A. பீற்றூட்,கரட்,என்னும் தாவரங்களின் வேர்களில் உணவு சேமிக்கப்படும்.

B. உருளைக்கிழங்கு, இஞ்சி என்னும் தாவரங்களின் இனப்பெருக்கம் வேர்த்தண்டு கிழங்கின் மூலம் நடைபெறுகின்றது.

C. மரவள்ளி,வற்றாளை எனும் தாவரத்தண்டுகளில் உணவு சேமிக்கப்பட்டுள்ளது.

D. சேப்பங்கிழங்கு,மஞ்சள் போன்ற தாவரங்களின் விளைச்சலாகநிலக்கீழ்த் தண்டு பெறப்படுகின்றது.

37. வாழையின் நடுகைப் பொருளாக பயன்படுத்தத்தக்க உறிஞ்சி வகை யாது?

38. முளைத்தலைத் தூண்டும் இரசாயனப் பதார்த்தங்கள் எவை?

## பகுதி - II

1. தண்டுத் துண்டங்களை வேர்விடச் செய்யப் பொருத்தமான எளிய சூரிய இனப் பெருக்கியைத் தயாரிக்கும் முறையை வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக? இதன் பயன்பாடு 2 தருக? இதில் பேணப்படும் சூழல் நிபந்தனைகள் எவை?

2. a. வித்து உறங்குநிலை என்றால் என்ன?

   b. வித்து உறங்குநிலைக்கான காரணங்கள் எவை?

   c. வித்து உறங்குநிலையை அகற்றும் முறைகள் 3 தருக?

   d. நடுகைக்கு உகந்த வித்தின் இயல்புகள் எவை?

3. தாவரப் பதியமுறை இனப்பெருக்கத்தின் அனுகூலங்கள் 4 தருக?
4. ஒட்டுதலுக்கெனப் பயன்படுத்தப்படும்

   i.ஒட்டுக் கட்டை ii.ஒட்டுக்கிளை ஆகியன பெறப்படும் தாவரங்களில் காணப்படவேண்டிய இயல்புகள் மூன்று வீதம் தருக?
5. மாங்கன்றின் கிளையொட்டை மேற்கொள்ளும் முறையை வரிப்படங்களின் உதவியுடன் விளக்குக?
6. காற்றுப் பதிவைத்தலுக்கென கிளையொன்றைத் தெரிவுசெய்யும் போது அதில் காணப்பட வேண்டிய இயல்புகள் 2 தருக?
7. பெயரிடப்பட்ட வரிப்படத்தின் உதவியுடன் காற்றுப் பதிவைத்தலை மேற்கொள்ளும் முறையை விபரிக்க?
8. பதியமுறை இனப்பெருக்கத்திற்கும் இலிங்கமுறை இனப்பெருக்கத்திற்கும் இடையே உள்ள நான்கு வேறுபாடுகளைத் தருக?
9. நடுவதற்கு பயன்படுத்தப்படும் வித்துக்களில் இருக்கவேண்டிய சிறப்பியல்புகள் எவை?
10. றோசாச் செடியில் மேற்கொள்ளப்படும் அரும்பொட்டு முறையொன்றினைக் குறிப்பிட்டு அவ்வொட்டு நடத்தும் விதத்தை விளக்கப்படங்களின் துணையுடன் விளக்குக?
11. நிலத்திற்கு வளையத்தக்க கிளையை பதிவைப்பதன் மூலம் வேர்விடச் செய்யும் விதத்தை வரிப்படத்தின் மூலம் விளக்குக?
12. அத்தாட்சிப்படுத்தப்பட்ட விதைநெல்லில் இருக்கவேண்டிய நியமங்கள் எவை?
13. பூவின் பகுதிகளை வரைந்து பகுதிகளைக் குறிக்குக?
14. ஒருவித்திலைத் தாவரத்தின் படத்தினை வரைந்து பகுதிகளைப் பெயரிடுக?
15. இருவித்திலைத் தாவரத்தின் படத்தினை வரைந்து பகுதிகளைப் பெயரிடுக?
16. வித்துப் பரிகரிப்பு என்றால் என்ன?
17. வித்துப்பரிகரிப்பின் நோக்கங்கள் 5 தருக?
18. பதியமுறை இனப்பெருக்கத்தை வகைப்படுத்தி உதாரணம் தருக?
19. நாட்டுவதற்குப் பொருத்தமான பதியப்பாகங்கள் சில தருக?
20. தண்டுத்துண்டங்களை வளர்ப்பதற்குத் தேவையான ஊடகக் கலவையைத் தயாரிக்கும் முறையைத் தருக?
21. தண்டுத் துண்டங்களை வகைப்படுத்தி உதாரணம் தருக?
22. இலைத்துண்டத்திற்கு உதாரணம் தருக?
23. வேர்த்துண்டத்திற்கு உதாரணம் தருக?
24. இழையவளர்ப்பின் மூலம் இனப்பெருக்கப்படும் தாவர வகைகள் சில தருக?
25. இழையவளர்ப்பின் மூலம் பெறப்படும் தாவரங்களினால் கிடைக்கும் அனுகூலம் பிரதிகூலங்களை அட்டவணைப்படுத்துக?
26. வித்துக்கள் மூலம் இனப்பெருக்கம் செய்த தாவரத்திற்கும் பதியமுறை மூலம் இனப்பெருக்கம் செய்த தாவரத்திற்கும் இடையிலான அனுகூலம் பிரதிகூலங்களைத் தருக?

# ஆளுகை நிபந்தனையின் கீழான பயிர்ச்செய்கை

## பகுதி - II

01. பயிர்ச்செய்கையில் சூழல் நிலைமைகளை கட்டுப்படுத்த வேண்டியதன் அவசியம் நான்கு தருக?
02. நாற்றுமேடையில் இருந்து பிடுங்கப்பட்ட நாற்றுகளை வயலில் நாட்டியதும் அவற்றுக்கு குளைகள் நடப்பட்டு நிழல் வழங்கப்படும் இதன் நோக்கம் நான்கு தருக?
03. ஆளுகை செய்யப்பட்ட இல்ல வகைகள் நான்கு தருக?
04. ஆளுகை இல்லங்களில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதனால் கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக?
05. மண்ணின்றிய பயிர்ச்செய்கை என்றால் என்ன?
06. மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறைகள் யாவை?
07. திண்ம ஊடகங்களாகப் பயன்படுத்தக் கூடிய பதார்த்தங்கள் நான்கு தருக?
08. மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறைகளை மட்டுப்படுத்தும் காரணிகள் யாவை?
09. மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறையில் பயன்படுத்தப்படும் போசணை ஊடகக்கலவையில் இருக்கவேண்டிய இயல்புகள் நான்கு தருக?
10. மண்ணின்றிய பயிர்ச்செய்கை முறையில் தற்போது பாவனையில் உள்ள போசணை ஊடகக்கலவைகள் இரண்டின் பெயரைத் தருக?
11. ஆளுகை நிபந்தனையின் கீழ் பயிர் செய்யும் போது கட்டுப்படுத்தப்படும் காலநிலைக் காரணிகளை குறிப்பிடுக?
12. இலங்கையில் தற்போது அதிகளவில் பயன்படுத்தப்படும் இனப்பெருக்க கட்டமைப்பு எது?
13. திண்ம ஊடகப் பயிர்ச்செய்கை முறைகளை குறிப்பிடுக?
14. மண்ணின்றிய திரவ ஊடக பயிர் வளர்ப்பு முறைகள் 2 தருக?
15. நீர்மயவூடகப் பயிர்ச் செய்கையின் அனுகூலங்களைக் குறிப்பிடுக?

## பயிர்ச்செய்கை முறைகளும் கோலங்களும்

01. இலங்கையில் கையாளப்படும் அபிவிருத்தியடையாத பயிர்ச்செய்கை முறையாது?
02. ஒரு குறித்த காலப்பகுதிகளுள் ஒரு குறித்த நிலப்பரப்பில் பல பயிர்வகைகளைப் பயிரிட்டு உச்சஅளவு விளைச்சலைப் பெற்றுக் கொள்ளக்கூடிய வினைத்திறன் மிக்க பயிர்ச்செய்கை முறை யாது?
03. ஒரேபண்ணையில்பயிர்ச்செய்கை, விலங்குவளர்ப்பு, வலுச்சக்தி உற்பத்தி ஆகியவற்றை மேற்கொள்ளும் அதேவேளை பண்ணையின் கழிவுப்பொருட்கள் அனைத்தையும் அப்பண்ணையின் வேறு உற்பத்திகளுக்கான தொடக்க பொருளாகவும் பயன்படுத்திக் கொள்ளும் வேளாண்மை முறை எப்பெயரால் அழைக்கப்படும்?
04. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையின் போதுஅவற்றுள் ஒருபயிராக எப்போதும் அவரைப் பயிர் ஒன்று தெரிவு செய்வதற்கான காரணம் யாது?
05. 500mm இக்கு குறைவான வருடார்ந்த மழைவீழ்ச்சியைக் கொண்ட பிரதேசங்களில் கிடைக்கப் பெறும் நீரை வினைத்திறனுடன் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறை யாது?
06. அறுவடையின் போது மண்ணில் அடங்கியுள்ள பெருமளவு போசணைப் பொருட்கள் பயிர் விளைபொருட்களுடன் மண்ணிலிருந்து அப்புறப்படுத்துவதுண்டு மண்ணுக்கு நைதரசன் வழங்குவதற்காகப் பயிரிடுவதற்கு ஏற்ற பயிர் வகைகள் எது?
07. சுற்றுமுறைப் பயிர்ச்செய்கையின் போது கிழங்குப் பயிர் பயிரிடப்படுவதன் நோக்கம் யாது?
08. தென்னைச் செய்கையில் தென்னைக்கு கீழே பயிரிடத்தக்க பொருத்தமான ஆண்டுப் பயிர்கள் யாவை?
09. ஒருவிவசாயி தமது 25 ஆண்டுகள் வயதுள்ள தென்னைகளிடையே அன்னாசிச் செய்கையை ஆரம்பித்தார். இப்பயிர்ச்செய்கை முறை யாது?
10. மலைநாட்டு வீட்டுத் தோட்டங்களில் பலவிதமான பயிர்கள் ஏககாலத்தில் ஒரே இடத்தில் ஒழுங்கின்றி பயிரிடப்பட்டிருந்தன. இப்பயிர்ச்செய்கை முறை யாது?
11. விவசாயி ஒருவர் தனது தென்னந்தோட்டத்தில் மிளகுச் செய்கையை ஆரம்பித்தார். இவ்வாறு பிரதான பயிருக்கு மேலதிகமாக வேறுபயிர்களைச் செய்கைபண்ணும் பயிர்ச்செய்கை முறை எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்?
12. இரண்டு பயிர்கள் செய்கை பண்ணப்படும் காலஅளவு குறையத்தக்க விதத்தில் முதலாவது பயிரின் இனப்பெருக்க அவத்தையும், இரண்டாவது பயிரின் பதியஅவத்தையும் ஒன்றாக அமையுமாறு ஒரே நிலத்தில் இரண்டு பயிர்களையும் பயிர் செய்தல் எப்பயிர்ச் செய்கை முறையாகும்?
13. மழை நீரை மாத்திரம் பயன்படுத்தி செய்யப்படும் பயிர்ச்செய்கை முறை யாது?
14. ஒரே தரையில் ஒரே நேரத்தில் ஒழுங்கற்ற முறையில் இரண்டு அல்லது அவற்றிக்கு கூடிய பயிர்வகைகளை செய்கை பண்ணும் பயிர்ச் செய்கை யாது?

15. காப்புச் பயிர்ச் செய்கையில் உப தொகுதிகள் எவை?
16. விவசாய வனச் செய்கைத் தொகுதியின் பிரிவுகள் எவை?
17. விவசாய வனவளர்ப்புத் தொகுதியில் உள்ளடங்கக்கூடிய விவசாய உற்பத்திகள் எவை?
18. தெங்குப் பயிர்களிடையே இடைப் பயிர்ச்செய்கையைச் செய்கைப்பண்ண உகந்த கால அளவு யாது?
19. பெரும்பாலும் தனிப் பயிர்ச்செய்கையாக செய்யப்படும் பயிர்கள் எவை?
20. குறித்த காலப்பகுதிக்குள் ஒரு குறித்த நிலப்பரப்பில் பல பயிர் வகைகளைப் பயிரிட்டு உச்ச விளைச்சலைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வினைத்திறன் மிக்க பயிர்ச்செய்கை முறை எது?
21. சுழற்சி முறைப் பயிர்ச் செய்கையின் போது அவற்றுள் ஒரு பயிராக இப்போது அவரையப் பயிர் ஒன்று தெரிவு செய்வதற்கான காரணம் யாது?
22. குறைவான வருடாந்த மழைவீழ்ச்சி பெறும் பிரதேசங்களில் கிடைக்கப்பெறும் மழைநீரை வினைத்திறனுடன் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பயிர்ச்செய்கை முறை யாது?
23. அறுவடையின் போது மண்ணில் அடங்கியுள்ள பெருமளவு போசணைப் பொருட்கள் அகற்றப்படுபதுண்டு. மண்ணுக்கு நைதரசன் வழங்குவதற்காக ஏற்ற பயிர் வகைகள் எவை?
24. தென்னைச் செய்கையிடையேஇடைப்பயிராக செய்கைபணணக்கூடிய பயிர்கள் எவை?
25. சேனைப் பயிர்ச் வெய்கையின் போதுகாடுகள் வெட்டி உலர விடப்படும். இவற்றுக்கு தீ வைத்து துப்பரவு செய்ய உகந்த மாதம் யாது?
26. நான்மடியச் சுழற்சி முறையில் தெரிவு செய்யப்படும் பயிர் வகைகள் எவை?
27. சுழற்சி முறையில் தானியப் பயிருக்கு அடுத்தாக செய்யக்கூடிய பயிர்வகை எது?
28. மண்ணின் ஆழமான பகுதியிலிருந்து போசணைகளைஅகற்றுறிஞ்சும் பயிர் வகை எது?
29. சுழற்சி முறையில் கிழங்குப் பயிர்களைச் செய்கையில் மண்ணில் ஏற்படும் மாற்றம் யாது?

## பகுதி - II

01. சேனைப் பயிர்ச்செய்கையில் காலநிலைக் கோலத்திற்கமைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் திட்டமிடப்படும் சேனைப் பயிர்ச்செய்கையில் காடழித்தல் தொடக்கம் அறுவடை மேற்கொள்ளும் வரையான செயற்பாடுகள் ஒவ்வொன்றும் மேற்கொள்ளப்படும் விதத்தையும் காலங்களையும் படிமுறையில் விளக்குக?
02. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?
03. நான்மடியச் சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையை உதாரணங்கள், வரிப்படங்கள் ஆகியன மூலம் விளக்குக?
04. சுழற்சிமுறைப் பயிர்ச்செய்கையின் அனுகூலங்கள் நான்குதருக?
05. i. பயிர்ச்செய்கை முறை என்ற வகையில் விலங்கு - பயிர் மாற்றுப்பயிர்ச் செய்கையின் அனுகூலங்கள் நான்குஎழுதுக?
    ii. விலங்கு - பயிர் மாற்றுப்பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் முறையைச் சுருக்கமாக விளக்குக?
06. சேனைப் பயிர்ச்செய்கை பாதிப்பானதொரு பயிர்ச்செய்கை முறையாகக் கூறப்படுகின்றது. இதற்கான காரணங்கள் குறிப்பிடுக?

07. இடைப் பயிர்செய்கை, கலப்புப் பயிர்ச்செய்கை ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் விளக்குக?
08. இடைப் பயிர்செய்கையை உதாரணங்களுடன் விளக்குக?
09. இடைப் பயிர்செய்கையால் கிடைக்கும் அனுகூலங்ளை ஆராய்க?
10. ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை என்றால் என்னவென்பதை சுருக்கமாக விளக்குக?
11. சேனைப் பயிர்ச்செய்கை சுற்றாடலின் அழிவுக்கு வழிவகுக்கும் விதத்தை விளக்குக?
12. ஒன்றிணைந்த பயிர்ச்செய்கையின் அனுகூலங்கள் நான்கு தருக?
13. விவசாய வனவளப்பின் முக்கியத்துவங்கள் நான்கு தருக?
14. தனிப்பயிர்ச் செய்கையுடன் ஒப்பிடுகையில் பல்பயிர்ச் செய்கையில் நிச்சயமற்ற தன்மை குறைவாகும்.
    i. தனிப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?
    ii. பல்பயிர்ச்செய்கை என்றால் என்ன? உதாரணம் தருக?
    iii.பல்பயிர்ச்செய்கை நிச்சயமற்றதாக அமைவதற்கான காரணங்கள் தருக?

15. காப்புப் பயிர்ச்செய்கை என்றால் என்ன?
16. சேனைப் பயிர்ச் செய்கையின் படிமுறைகளையும் மேற்கொள்ளப்படும் மாதங்களையும் அட்டவணைப்படுத்துக?
17. சேனைப் பயிர்ச் செய்கையின் சிறப்பியல்புகள் எவை?
18. சேனைப் பயிர்ச் செய்கையின் போது காடுகளை அழிக்கப்படும். இதனால் ஏற்படும் தீமைகள் எவை?
19. சேனைப் பயிர்ச் செய்கையின் போது காடுகள் அழிக்கப்படுவதால் பல பிரதிகூலங்கள் ஏற்படுகின்ற போதும் இப் பயிர்ச் செய்கை முறையில் ஏற்படும் அனுகூலங்கள் எவை?
20. சுழற்சி முறைப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவங்கள் எவை?
21. விலங்கு பயிர் மாற்று வேளாண்மை என்றால் என்ன?
22. ஒன்றிணைந்த பயிர்ச்செய்கை என்றால் என்ன?
23. ஒன்றிணைந்த பயிர்ச் செய்கையின் அனுகூலங்கள் எவை?
24. காப்புப் பயிர்ச் செய்கை என்றால் என்ன?
25. காப்புப் பயிர்ச் செய்கையின் விசேட அம்சங்கள் எவை?
26. விவசாய வனவளரப்பில் முக்கியத்துவங்கள் எவை?
27. கலப்புப் பயிர்ச் செய்கையின் அனுகூலங்கள் எவை?
28. தனிப் பயிர்ச் செய்கை என்றால் என்ன?

செயலட்டை -04

தரம் - 11

## விளைபொருள்களில் அறுவடைக்குப் பிந்திய இழப்புகள்

பகுதி -11

1. அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களை ஏற்படுத்தும் முன் அறுவடைக் காரணிகள் நான்கு தருக?
2. சீரற்ற நீர்ப்பாசனம் சில பயிர்களில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமையும். அவ்வாறான சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் இரண்டைத் தருக?
3. அறுவடை செய்யப்பட்ட பயிர் விளைச்சல்கள் நுகர்வோரது கைகளுக்குச் செல்லும் வரை இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4. அறுவடை செய்தலின் போது ஏற்படக்கூடிய இழப்புக்கள் இரண்ட தருக.
5. காய்கறிகள்,பழங்கள் ஆகியவற்றில் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் நான்கு தருக.
6. அறுவடைக்குப் பின்னர் பழுக்கும் ஆற்றலற்ற பழங்கள் நான்கு தருக?
7. விளைபொருட்களை கொண்டு செல்லலின் போது இழப்புக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் நான்க தருக.
8. முன் அறுவடைக் காரணிகளில் இழப்புக்களை ஏற்படுத்துவதில் காலநிலைக் காரணிகளும் ஒன்றாகும். இதனைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் இரண்டைத் தருக.
9. விவசாய விளைபொருட்களில் ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்களைக் குறைப்பதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் முன்று தருக.
10. அறுவடை தொடக்கம் நுகர்வோர் கைகளுக்கு செல்லும் வரையான படிமுறைகள எழுதுக?
11. சீரற்ற நீர்ப்பாசனம் அறுவடை இழப்பை ஏற்படுத்துகின்றமைக்கான உதாரணம் இரண்டு தருக?
12. பழங்கள் அறுவடைக்குப் பின்னர் அதிகளவில் இழக்கப்படுகின்றன இதை குறைப்பதற்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் நான்கு தருக?

வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு - வவுனியா
துரித விசேட செயற்றிட்டம் க.பொ.த (சாதாரன தரம்) – 2017
விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும்

செயலட்டை -05

தரம் - 11

## மனித போசனை

பகுதி – 1

1. புரத உணவுப்பொருட்களில் அடங்கும் பிரதான மூலகங்கள் யாவை?
2. ஒரு சக்கரைட் உணவுப் பொருட்கள் மூன்று தருக?
3. இரு சக்கரைட் உணவுப் பொருட்கள் மூன்று தருக?
4. தாவர உணவுப்பொருட்களில் உள்ளடக்கப்படாத இருசக்கரைட் யாது?
5. பல் சக்கரைட் உணவுப்பொருட்கள் மூன்று தருக?
6. தாவரங்களில் மட்டும் அடங்கியுள்ள பல்சக்கரைட் யாது?
7. விலங்கு மாப்பொருளென அழைக்கப்படும் உணவுப்பொருள் யாது?
8. தாவர புரத உணவுப்பொருட்கள் நான்கு தருக?
9. இலிப்பிட்டு உணவுப்பொருட்கள் மூன்று தருக?
10. வளர்ச்சி தோல்,கண்களின் ஆரோக்கியம் என்பவற்றுக்காக வழங்கவேண்டிய உணவுப்பொருட்கள் மூன்று தருக?
11. குருதிச்சோகை நோய் எவ்விற்றமின் குறைபாட்டால் ஏற்படும்?
12. குருதி உறைதலை ஊக்குவிக்கும் விற்றமின் யாது?
13. விற்றமின் C அதிகளவில் உள்ள உணவுப்பொருட்கள் நான்கு தருக?
14. உடலிற்கு அதிகளவு தேவைப்படும் கனியுப்புக்கள் நான்கு தருக?
15. கல்சிய குறைபாட்டால் மனிதனில் ஏற்படும் பாதிப்புக்கள் மூன்று தருக?
16. கீமோகுளோபின் உற்பத்தியில் பங்குகொள்ளும் கனியுப்பு யாது?
17. அல்லூட்டம் என்றால் என்ன?
18. அயடீன் குறைபாட்டு நோயினைத் தருக?
19. இலங்கையில் உள்ள வளர்ந்தோரில் காணப்பட வேண்டிய BMI பெறுமானம் யாது?
20. எந்த போசனை உணவுகளை மிகையாக உட்கொள்வதனால் அதிக உடற்பருமன் ஏற்படுகின்றது?

பகுதி 11

1. காபோவைதரேற்றின் முக்கியத்துவம் மூன்று தருக?
2. புரதத்தின் முக்கியத்துவம் நான்கு தருக?
3. இலிப்பிட்டின் முக்கியத்துவம் நான்கு தருக?
4. நபரொருவரின் போசனைத் தேவை எக்காரணிகளில் தங்கியுள்ளது?
5. தற்போது இலங்கையில் காணப்படும் போசனைப் பிரச்சினைகள் நான்கு தருக?
6. குறைபோசனையால் ஏற்படும் பாதகமான விளைவுகள் நான்கு தருக?
7. புரதக்கலோரி குறைபாட்டு நோய் ஒன்றினைக் குறிப்பிட்டு அதன் நோய் அற்குறிகள் இரண்டு தருக?
8. அதிக உடற்பருமன் காரணமாக ஏற்படத்தக்க பிரச்சினைகள் நான்கு தருக?
9. அயடீன் குறைபாடு காரணமாக ஏற்படத்தக்க பாதகமான விளைவுகள் நான்கு தருக?
10. மனிதனில் காணப்படத்தக்க இரும்பு குறைபாட்டு நிலைமைகள் மூன்று தருக?

செயலட்டை -06 | தரம் - 11

# உணவு பழுதடைதல்

01. பழுதடைந்த உணவின் இயல்புகள் எவை?
02. பழுதடைந்த உணவை உண்பதால் ஏற்படக் கூடி ய பிரச்சனைகள் 3 தருக?
03. உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் இரசாயணக் காரணிகள் 3 தருக?
04. இலகுவில் பழுதடையக் கூடிய உணவுகளைப் பட்டியல்ப்படுத்துக?
05. பழுதடைந்த உணவில் காணக்கூடிய டீவறுபாடுகள் மூன்று தருக?
06. உணவு பழுதடைவதற்குக் காரணமான பௌதீகக் காரணிகள் நான்கைக் குறிப்பிடுக?
07. உணவு பழுதடைதலில் செல்வாக்குச் செலுத்தும் உயிரியல் காரணிகள் நான்கு தருக?
08. அதிக வெப்பம் காரணமாக உணவுப்பொருட்களில் ஏற்படத்தக்க மாற்றங்கள் இரண்டு தருக?
09. அதிக குளிர் காரணமாக உணவுப்பொருட்களில் ஏற்படத்தக்க மாற்றங்கள் இரண்டு தருக?
10. உணவுப் பொருட்களுடன் வேண்டுமென்றே கலப்படம் செய்யப்படும் பதார்த்தங்கள் மூன்று தருக?
11. பாண்டலடையும் உணவுப்பொருள் மூன்று தருக?
12. நொதியஞ்சார் கபிலநிறத்தாக்கம் ஏற்படும் பழவகை இரண்டு தருக?
13. உணவில் அப்லரொக்சின் (Aflatoxin) சேர்வதால் ஏற்படும் நோய் யாது?
14. சில நபர்களுக்கு சில உணவுகளை உண்பதால் ஒவ்வாமை நிலமை ஏற்படும். அவ்வகையான உணவு வகைகள் மூன்று தருக?
15. உணவில் நஞ்சாவதால் ஏற்படும் நோயறிகுறிகள் நான்கு தருக?
16. உணவில் நச்சுப் பதார்த்தங்கள் கலக்கத்தக்க சந்தர்ப்பங்கள் நான்கு தருக?
17. இயற்கையாகவே நச்சு இரசாயனங்கள் அடங்கியுள்ள உணவுகள் மூன்று தருக?
18. தக்காளியை உணவுடன் அதிகமாக சேர்ப்பதால் ஏற்படும் பிரதான பாதிப்பு யாது?
19. மரவள்ளியில் நச்சுத்தன்மையை ஏற்படுத்தும் பதார்த்தம் யாது?
20. ஒவ்வாமையை ஏற்படுத்தக்கூடிய உணவுகள் மூன்று எழுதுக?
21. உணவை பழுதடையச் செய்யும் பக்றீரியாக்கள் இரண்டின் பெயர் தருக?
22. பழுதடைந்த உணவை இனங்காண்பதற்கு உதவும் இயல்புகள் மூன்று தருக?
23. உணவு நஞ்சாதலைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ளத்தக்க வழிவகைகள் மூன்று தருக?
24. உணவு பழுதடைதலை கட்டுப்படுத்த மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் நான்கு தருக?
25. உணவில் நச்சுப்பதார்த்தங்கள் கலக்கத்தக்க சந்தர்ப்பங்கள் நான்கு தருக?

| செயலட்டை -07 | தரம் - 11 |
|---|---|

# உணவு நற்காப்பு

## பகுதி 1

1. உணவு நற்காப்பு என்றால் என்ன?
2. உணவுகளை நற்காப்பு செய்ய வேண்டியதன் முக்கியத்துவம் மூன்று தருக?
3. உணவை பழுதடையச் செய்யும் நுண்ணங்கிகள் மூன்று தருக?
4. உணவை பழுதடையச் செய்யும் பேரங்கிகள் மூன்று தருக?
5. உணவு நற்காப்பு கோட்பாடுகள் மூன்றும் எவை?
6. நுண்ணங்கிகளைச் செயலிழக்கச் செய்யும் முறைகள் ஐந்து தருக?
7. உணவை உலர்த்தும் முறைகள் மூன்று தருக?
8. சூரிய ஒளியின் மூலமாக சுத்தமாக உலர்த்துவதற்கு பாவிக்கப்படும் உபகரணம் எது?
9. சிவிறி உலர்த்தல் மூலமாக உலர்த்தப்படும் உணவு யாது?
10. பாய்ச்சராக்கம்,கிருமியழித்தல் வேறுபாடுகள் மூன்று தருக?
11. பாய்ச்கராக்கத்தில் HTST,LTLT என்றால் என்ன?
12. செறிவூட்டப் பயன்படும் பொருட்கள் இரண்டு தருக?
13. செறிவூட்டலில் உணவு எவ்வாறு பேணப்படுகிறது?
14. ஜாம் உற்பத்தி படிமுறைகளைத் தருக?
15. நொதித்தல் நிகழும் மூன்று முறைகளும் எவை?
16. வினாகிரி உற்பத்திக்குப் பயன்படும் பக்றீரியா எது?
17. யோக்கட்,சீஸ் போன்றன எவ்வகையான நொதித்தல் மூலம் பேணப்படுகின்றது.
18. உணவு நற்காப்பிலிகள் என்றால் என்ன?
19. பழப்பான வகைகளுக்கு பயன்படுத்தப்படும் நற்காப்பிலிகள் இரண்டு தருக?
20. பழப்பாகு,ஜாம்,குளிர்பானங்களுக்கு பயன்படுத்தப்படும் நற்காப்பிலிகள் இரண்டு தருக?
21. இறைச்சி உற்பத்திகளை பேணுவதற்கு பாவிக்கப்படுவது யாது?
22. நொதியங்களை செயலிழக்கச் செய்து உணவை நற்காப்பு செய்யும் முறைகள் மூன்று தருக?
23. பழ ஜாம் தயாரிக்கும் போது சில சமயங்களில் பெக்ரின் சேர்க்கப்படும். இதன் நோக்கம் யாது?
24. உணவுக்குப் பெறுமதி சேர்த்தல் என்றால் என்ன?
25. உணவுகளின் பெறுமானம் அதிகரிக்க செய்வதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக?
26. உணவுகளின் பெறுமானம் அதிகரிக்க செய்யும் முறைகள் மூன்று தருக? அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக?
27. உணவை வளப்படுத்தல் என்றால் என்ன?
28. உணவை சத்தூட்டல் என்றால் என்ன?
29. இழிவுப் பதப்படுத்தல் என்றால் என்ன?
30. பாச்சராக்கல் முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் யார்?

## பகுதி 11

1. உணவைப் பேணிவைப்பதன் முக்கிய பயன் யாது?
2. உலர்த்தல் என்பது உணவுப்பொருளைப் பேணப் பயன்படுத்தப்படும் ஒருமுறையாகும். உலர்த்துவதனால் எவ்வாறு உணவு பேணப்படும்?
3. இறைச்சி,மீன் ஆகியவற்றை நீண்டகாலம் பழுதடையாது பேணுவதற்காக ஆழ்குளிரூட்டப்படும். இதன் நோக்கம் யாது?
4. பண்ணைஉற்பத்திகளை பழுதுறாது பாதுகாக்க நுண்ணங்கி வளர்ச்சிக்கு தீங்குபயக்கும் நிலைமைகளை அவற்றில் ஏற்படுத்துவர் ஆயினும் பாலைப் பாதுகாக்கும் முறையொன்றின் போது நுண்ணங்கிகளைப் பயன்படுத்துவர். இது எச்சந்தர்ப்பத்தின் போது பயன்படுத்தப்படும்?
5. பப்பாசிப்பழம் அறுவடைசெய்யும் சந்தர்ப்பம் யாது?
6. சில உணவுப்பொருட்கள் நற்காப்புசெய்யப்படும் போதுதகரத்தில் அடைக்கப்படும். இவ்வாறு தகரத்திலடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் 2 தருக?
7. இரசாயனப் பொருட்களை இடுவதன் மூலம் சில உணவுப் பொருட்களை நற்காப்பு செய்யலாம். பழச்சாறுகளை நற்காப்பிட பாவிக்கப்படும் இரசாயனப் பொருள் யாது?
8. மாம்பழங்களை அறுவடை செய்தவுடன் நீரில் அல்லது 50-55$^{o}$c இளஞ்சூடானநீரில் கழுவி சுத்தமான புடவைத் துண்டினால் துடைத்தபின் களஞ்சியப்படுத்தப்படும். இதன் போது எதனை எதிர்பார்க்கலாம்?
9. விவசாய உற்பத்திப் பொருட்களை நற்காப்பிடும் பல்வேறு முறைகளை தருக?
11. விவசாய உற்பத்திகள் அழிந்து போகக்கூடிய சந்தர்ப்பமொன்றை விபரிக்க?
12. பழ ஜாம் தயாரிக்கும் போது பெக்ரின் சேர்க்கப்படும். இதன் நோக்கம் யாது?
13. தேங்காய் எண்ணெயில் நாட்செல்லும் போது ஒட்சியேற்றம் என்னும் இரசாயனமாற்றம் நடைபெறும். இது எவ்வாறு அழைக்கப்படும்?

# கால்நடை வளர்ப்பு

## பகுதி 1

**கோழிவளர்ப்பு**

01. புரொயிலர்க் கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்யப் பொருத்தமான வயது யாது? (நாட்களில் தருக)
02. கோழிப் பண்ணையொன்றிலிருந்த கோழிகளின் தாடை, பூ ஆகியவற்றில் சிறிய கொப்புளங்கள் ஏற்பட்டு அவற்றிலிருந்து சீழ் வடிவதையும் காலப்போக்கில் கரிய நிறப் படையொன்று அவ்விடத்தில் உருவாவதையும் விவசாயிஅவதானித்தார். இந் நோய் யாது?
03. கோழிகளின் உணவுப் பங்கீட்டில் மீன்தூள் சேர்க்கப்படும். இதன் மூலம் விலங்குகளுக்கு கிடைக்கும் பிரதான போசணைப் பதார்த்தம் யாது?
04. கோழிகளில் ஏற்படும் புள்ளோரம் நோயின் நோய்க்காரணி யாது?
05. கோழிப் பண்ணையொன்றில் இறப்புவீதம் அதிகரித்திருந்ததுடன் குஞ்சுகளில் இரத்தக் கழிச்சலும் காணப்பட்டது. இந்நோய் எது?
06. கோழிக் கூட்டைஅமைக்கும் போது அதனுள்ளே சூரிய ஒளி நன்றாக விழத்தக்கதக அமைக்க வேண்டியதன் நோக்கம் யாது?
07. மிகக் கூடிய புரத அடக்கத்தைக் கொண்டிருக்க வேண்டிய கோழியின் கலவை எது?
08. அலகுப்பரப்பில் மிகக் கூடிய தொகையான கோழிகளை வளர்க்கக்கூடிய முறை யாது?
09. கோழிவளர்ப்பின் போது எதற்காக பொற்றாசியம் பரமங்கனேற்றுகரைசல் பொதுவாக பயன்படுத்தப்படும்?
10. கோழிக் குஞ்சுகளின் குதத்தைச் சுற்றிவெண்ணிறப் பூச்சுடன் வெண்ணிறக்கழிச்சல், உணவு சுவையின்மை, தூக்கம் ஆகிய குணங்குறிகள் காணப்படும் நோய் யாது?
11. கோழி முட்டை அடைக்கப்பட்டு குஞ்சு பொரிப்பதற்குச் செலவாகும் காலம் எத்தனை நாட்கள் ஆகும்?
12. கோழிகளின் உணவுப்பாதையில் வாழும் வட்டப்புழுக்களை அழிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பொருள் யாது?
13. கோழிக்கான உணவுப் பங்கீட்டின் கூறாகசோளம் அதிகஅளவில் பயன்படுத்தப்படுகின்றது. சோளத்தில் இருந்து கோழிக்கு கிடைக்கப் பெறும் போசணைப்பொருள் யாது?
14. கோழிகளில் பச்சைநிறக்கழிச்சல், உணவில் நாட்டமின்மை, விகாரமான நடத்தை ஆகிய அறிகுறிகளை ஏற்படுத்தும் வைரஸ் நோய் எது?
15. இலங்கையில் வளர்க்கப்படும் முட்டைக்கோழி, இறைச்சிக்கோழி வர்க்கங்களைக் குறிப்பிடுக?

16. அழகுக்காவும் பொழுது போக்கற்காகவும் வளர்க்கப்படும் கோழி வர்க்கங்களைப் பெயரிடுக?
17. கோழிகள் வளர்க்கப்படும் பிரதான முறைகளைப் பெயரிடுக?
18. கனகூள வளர்ப்பின் அனுகூலங்கள், பிரதிகூலங்களைக் குறிப்பிடுக?
19. செயற்கை முறையில் குஞ்சுகளைப் பராமரிக்கப் பயன்படும் குஞ்சுவதி (புரூடர்) ஒன்றின் படத்தை வரைந்து குறிக்க?
20. குஞ்சுவதியுனுள் கூடிய, குறைந்த பொருத்தமான வெப்பநிலைக்கு குஞ்சுகள் காட்டும் அனுகூலங்களைத் தனித்தனிப்படம் மூலம் காட்டுக?
21. விலங்குணவுத் பங்கீட்டுடொன்றை தயாரிக்கும் விவசாயி ஒருவரினால் தேர்ந்தெடுக்கக்கூடிய உணவு வகைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A–அரிசித்தவிடு

B– சோயாபோஞ்சிப் பிண்ணாக்கு

C–சிப்பி

D–நிலக்கடலைப் பிண்ணாக்கு

E– சோளம்

F–மீன்தூள்

இவற்றுள் புரதம் அதிகம் உள்ள உணவு வகைகள்களைக் குறிப்பிடுக.

22. அடைவைப்பதற்கான முட்டைகளை தெரிவுசெய்யும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் குறிப்பிடுக?
23. பொருத்தமற்ற கோழிகளை கழிக்கும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக?
24. கோழிகளைக் கழிப்பதன் அனுகூலங்களைக் குறிப்பிடுக?

The National e-learning Portal for The General Education

பகுதி - II

01. முட்டைஉற்பத்திக்கு மிகவும் உகந்த கோழி வர்க்கங்கள் 2 தருக?
02. கோழிகளுக்கு ஏற்படும் கொக்சிடியோசி சுநோயின்
    (i) நோய்க் காரணியைப் பெயரிடுக?
    (ii) நோய் அறிகுறிகளைத் தருக?
    (iii) நோய்க் கட்டுப்பாட்டு முறைகளை விபரிக்க?

03. கோழிகளில் அதிகளவில் புள்ளோரம் நோய் ஏற்படும்
    (i) இந்நோய்க்கான நோய்க் காரணியைப் பெயரிடுக?
    (ii) இந்நோயின் நோய ் அறிகுறிகள் 4 தருக?
    (iii) இந்நோயைத் தவிர்க்கும் முறைகள்4 தருக?

04. கோழிகளுக்கான உணவுப்பங்கீட்டில் அடங்கியிருக்க வேண்டிய போசணைப் பொருளைத் தருக?

05. மேற்கூறிய போசணைப் பொருட்கள் ஒவ்வொன்றையும் வழங்கக்கூடிய ஒவ்வொரு உணவுப் பொருளைத் தருக?

06. சுத்தமான முட்டை உற்பத்திக்காக பண்ணையில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் இரண்டை சுருக்கமாகத் தருக?

07. கோழிகளுக்கு ஏற்படும் கோழியம்மை நோயின் நோய்க்காரணியைப் பெயரிட்டு அதன் குணங்குறிகளையும் தருக?

08. பின்வரும் உணவுவகைகளைக் கோழிக்குகொடுப்பதன் முக்கியத்துவம் யாது?

a. தானியத் தூள்

b. கீரை வகைகள்

c. நுண்ணுயிர்க்கொல்லிகள்

d. சிப்பித்துண்டுகள்

09. கோழிகளுக்கான உணவுப் பங்கீட்டைத் தயாரிக்க பயன்படுத்தத்தக்க உள்ளூர்ப் பொருட்கள் யாவை?

10. ஒரு நாள் வயதுள்ள கோழிக்குஞ்சுகளைப் பேணும் போது கருத்தில் கொள்ள வேண்டிய பிரதான காரணிகள் யாவை?

**மாடுவளர்ப்பு**

பகுதி - I

01. இலங்கையில் உலர்வலயப் பிரதேசங்களில் வளர்க்கச் சிபார்சு செய்யப்பட்டுள்ள பாற்பசுவர்க்கம் யாது?

02. கூற்றுக்களுள் சரியானவையாவை?

A - காற்றின்றிய நிலையில் புல்லைப் பகுதியாக கொதிக்கச் செய்து குளிக்காப்புத்தீன் தயாரிக்கப்படும்

B - நன்குமுற்றியபுல் அறுவடை செய்யப்பட்டு கடுமையான சூரியஒளியில் உலர்த்தப்பட்டு தரமானஉயர் புல் தயாரிக்கப்படும்

C - பாதுகாக்கப்பட்ட புல்லைத் தயாரிப்பதற்குத் தேவையான புல்லை பூக்கமுன்னர் அறுவடை செய்யவேண்டும்

D - உலர் புல்லைவிட குழிக்காப்புத்தீன் அதிக நீர்ச் சதவீதம் கொண்டதாகும்

03. கால்நடை வளர்ப்பு சம்பந்தமான பின்வரும் நான்கு கூற்றுகளில் சரியானவை?

A - சகிவால் இலங்கையின் ஈரவலயத்தில் வளர்க்க சிபார்சு செய்யப்பட்ட மாட்டினமாகும்.

B - பிறீசியன் இலங்கையின் மலைநாட்டு பிரதேசங்களில் வளர்க்கப்பட்ட சிபார்சு செய்யப்பட்ட மாட்டினமாகும்.

C - ஆர்.ஐ.ஆர். இருநோக்க கோழிவர்க்கமாகும்.

D - சாணான் பாலுக்காக வளர்க்கச் சிபார்சு செய்யப்படும் ஆட்டினமாகும்.

04. இலங்கையின் கால்நடைவளர்ப்புத் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பிரதான அரச நிறுவனம் யாது?

05. நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் பாலுற்பத்திப் பொருட்கள் யாவை?

06. இலங்கையின் மேல்நாட்டு ஈரவலயத்தில் பாலுக்காக வளர்க்கப் பொருத்தமான ஐரோப்பிய மாட்டுவர்க்கம் யாது?
07. பூத்தல் 50% நடைபெற்றுள்ள சந்தர்ப்பத்தில் புல்லைவெட்டி உலர்த்தித் தயார்செய்யப்படும் மாட்டுத்தீன் வகையாது?
08. இலங்கையில் விலங்குவளர்ப்புத் தொடர்பானஆராச்சிகள் மிருகவைத்திய ஆராச்சி நிலையத்தினால் நடாத்தப்படும் இந்நிறுவனம் அமைந்துள்ள இடம் யாது?
09. மழைக்காலஆரம்பத்துடன் உலர்வலயப் பகுதிகளில் விரைவாகப் பரவும் மாட்டுநோய் எது?
10. மாட்டுக் கன்றுகளுக்கு ஏற்படும் குடல்புழு நோயைக் கட்டுப்படுத்தும் மருந்து யாது?
11. இந்திய மாட்டினங்கள் 3 தருக?
12. ஐரோப்பிய மாட்டினங்கள் 3 தருக?
13. மாட்டுத் தீன் என்றவகையில் வைக்கோலின் போசணைப் பெறுமானத்தை விருத்தி செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் பொருள் யாது?
14. ஒருபசுஅதன் அடுத்த கன்றை ஈனுவதற்கு எத்தனை மாதங்களுக்கு முன்னர் அதிலிருந்து பால் கறப்பதை நிறுத்தி பால்வற்றச் செய்தல் வேண்டும்?
15. மடியழற்சி நோயின் நோயாக்கியாது?
16. உண்ணிகளை கட்டுப்படுத்த பாவிக்கப்படும் பூச்சிகொல்லி யாது?
17. வைரசின் மூலம் மாடுகளில் பரவும் நோய்கள் 2 தருக?
18. புதிதாகப் பிறந்த மாட்டுக்கன்றின் தொப்புழ் கொடியைவெட்டி பூச்சித் தொல்லையிருந்து தடுப்பதற்கு பூசப்படுவது எது?
19. பற்றீரியாவினால் மாடுகளில் ஏற்படும் நோய்கள் 2 தருக?
20. மாட்டின் மடி சூடாகவும், வீங்கிக் கடினமாகவும் காணப்பட்டது. கறக்கும் பாலில் சென்நிறக் குருதித் துளிகளும் இருந்தன. மடியினைத் தொடும் போது மாடு வேதனைப்படுவதும் அவதானிக்கப்பட்டது. இது எந் நோயின் அறிகுறியாகும்?
21. ஒருபசுவின் பொதுவான கறவைக் காலம் யாது?
22. ஏரி,கழுத்துமடிப்பு,தொப்புழ் மடிப்பு ஆகியன நன்றாக விருத்தியாயிருக்கும் தளர்ந்த தோலையும் நீண்ட வாலையும் கொண்ட பாற்பசு ஒன்றின் பெயர் தருக?
23. குறைந்த கொழுப்பு அடக்கத்தை உடைய அதிகஅளவு பாலைத் தருகின்ற உடலில் வெள்ளை கறுப்புநிறப் புள்ளிகளையுடைய பசுவகை யாது?
24. மாடுகளில் கால் - வாய் நோயை ஏற்படுத்தும் நோய்க்காரணி யாது?
25. பிறந்தவுடன் மாட்டுக் கன்றுக்குகடும்புப் பால் கொடுத்தல் மிக முக்கியமாக இருப்பதற்கு காரணம் யாது?
26. A– யோகட் B– தயிர் C– உலர் பால்மா D–பட்டர் மேலுள்ளவற்றுள் நுண்ணங்கிகளின் நொதித்தலுக்கு உட்படுத்தி தயாரிக்கப்படும் உணவு வகைகள் எவை?
27. பாற்காய்ச்சல் நோய்க்கான பிரதான காரணம் யாது?
28. சந்தையிலுள்ள பால் உற்பத்திச் செயன்முறை ஒன்றின் பருமட்டான குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

தரப்படுத்தப்பட்ட பால் → பாச்சராக்கம் → ஏகவீனமாக்கலும் கலத்தலும் → ஜெலற்றினாக்கம் → சுவையூட்டிகளையும் உறைகலவையையும் கலத்தல் → குறித்த வெப்பநிலையில் பேணுவதற்காக அடைப்பொறியினுள் வைத்தல்

இப் பால் உற்பத்தி எவ்வகை உணவுத் தயாரிப்பாகும்?

29. பசுவில் எத்தனை நாட்களுக்கொரு தடவை சூல்வெளியேற்றம் (காம வெப்பச் சக்கரம்) நடைபெறும் ?
30. ஸ்ரிப்கப் பரிசோதனை பசுக்களில் ஏற்படும் எந்நோயை இனங்காண்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றது?
31. ஒரு பசுவின் கற்பகாலம் எத்தனை நாட்கள்?

## பகுதி - II

01. விலங்கு இல்லங்கள் அமைப்பதன் பிரதான நோக்கங்கள் யாவை?
02. விலங்கு வளரப்பிற்கு ஏற்ப இலங்கையின் கால்நடை வளர்ப்பு வலயங்கள் நான்கு தருக?
03. மேற்கூறிய ஒவ்வொரு வலயத்திலும் வளர்க்கத்தக்க மாட்டு வரக்கங்களைத் தருக?
04. விலங்கு இல்லத்தை அமைக்க பொருத்தமான இடத்தில் இருக்க வேண்டிய சிறப்பியல்புகளை விபரிக்க?
05. பண்ணை விலங்குகளில் நோய் ஏற்படுவதைத் தவிர்பதற்காக கைக்கொள்ளக்கூடிய வழிவகைகளை சுருக்கமாகத் தருக?
06. இலங்கையில் கால்நடை வளர்ப்பை மேம்படுத்த அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 4 தருக?
07. இலங்கையில் கால்நடை வளர்ப்பு சிறப்பாக காணப்படாமைக்கான காரணங்கள் மூன்றினைச் சுருக்கமாகத் தருக?
08. இலங்கையில் கால்நடை வளர்ப்பு சிறப்பாக காணப்பட்டமைக்கான காரணங்கள் மூன்றினைச் சுருக்கமாகத் தருக?
09. பாலைப் பேணி வைப்பதற்கு கையாள வேண்டிய முறைகள் யாவை?
10. விலங்கு உற்பத்தி பொருட்களின் காப்பிற்கு கையாளப்படும் 4 முறைகளை உதாரணங்களுடன் தருக?
11. மாடுகளுக்கான உணவாக பயன்படுத்தக்கூடிய அவரைத் தாவரங்கள் 2 தருக?
12. பண்ணை விலங்குகளை நோய்களிலிருந்து பாதுகாக்கவும் உயர் விளைச்சலைப் பெறவும் விலங்கு மனையை முறையாக அமைப்பது அவசியமாகும். இதன் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை?
13. உடன்பால் (Fresh milk) நுகர்வைப் பிரபல்யப்படுத்த மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைத் தருக?
14. சுத்தமான பால் உற்பத்திக்கு மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை விளக்குக?
15. விலங்குப் பண்ணையொன்றைப் பார்வையிட வருகைதந்த கால்நடை வைத்திய அதிகாரியொருவர் எழுதிக்கொண்ட குறிப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

    A– கறவை மாடுகள் சிலவற்றின் மடி வீங்கிக் காணப்பட்டது. மேலும் அம் மாடுகளிலிருந்து கறக்கப்பட்ட பால் திரட்சியடைந்த நிலையில் காணப்பட்டது.

B – சில மாடுகள் காலை நொண்டியபடி நடந்தன. அவ்வாறான மாடுகளின் வாயிலிருந்து உமிழ்நீர் வடிந்தவாறு காணப்பட்டது.

(i) மேலே A, B குறிப்பிட்ட நோய்க்குரிய நோய்களை முறையே எழுதுக?

(ii) அந்நோய்களுக்கான நோய்க்காரணிகளை முறையே குறிப்பிடுக?

16. பண்ணை விலங்குகள் நோய்வாய்ப்படும் போது வெளிக்காட்டப்படும் பொதுவான நோய் அறிகுறிகள் 4 தருக?

17. மாடுகளுக்கு ஏற்படும் கால் - வாய் நோயின்

   i. நோய்க் காரணிகளைப் பெயரிடுக?

   ii. நோய்க் கட்டுப்பாட்டு முறைகளை விபரிக்க?

18. இலங்கையின் பாலுக்காக வளங்கப்படும்

   i. ஐரோப்பிய மாட்டு வர்க்கங்கள் 2 தருக?

   ii. இந்திய மாட்டு வர்க்கம் ஒன்று தருக?

   iii. இந்திய எருமை வர்க்கம் ஒன்று தருக?

19. பசுக்களில் அதிகளவில் மடியழற்சி நோய் ஏற்படும்

   i. இந்நோயின் நோய்க்காரணிகளைப் பெயரிடுக?

   ii. இந்நோயின் நோய் அறிகுறிகள் 3 தருக?

   iii. இந்நோயினைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான வழிமுறைகள் 2 தருக?

20. விலங்கு வளர்ப்பை விருத்தி செய்வதன் மூலம் எமக்குக் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் 4 தருக?

21. கால்நடை வைத்திய நிலையங்களால் ஆற்றப்படும் சேவைகள் 2 தருக?

22. மாடு வளர்ப்பு முறைகளைப் பெயரிடுக?

23. பசுவொன்றினால் வெளிக்காட்டப்படும் வேட்கை அறிகுறிகளைக் குறிப்பிடுக?

24. மாடுகளுக்கு வழங்கக்கூடிய செறிவுத்தீன் வகைகளுக்கு உதாரணம் தருக?

25. மாடுகளுக்கு வழங்கக்கூடிய ஐதுத்தீன் வகைகளுக்கு உதாரணம் தருக?

26. பாலின் அடர்த்தியை துணிவதற்கு பயன்படும் உபகரணம் எது?

27. மாடு வளர்ப்பில் செயற்கை முறைச் சினைப்படுத்தல் என்றால் என்ன?

28. செயற்கைச் சினைப்படுத்தலின் அனுகூலங்கள் நான்கு தருக?

## உணவு பொதியிடலும் சுட்டித்துண்டிடலும்

பகுதி–I

01. கித்துள் பாணியை பொதி செய்ய பயன்படும் தாவர இலை யாது?

02. தயிர்,பியர்,யோக்கட்,கித்துள்பாணி என்பவற்றை பொதியிட பயன்படுவது யாது?

03. காட்போட் பெட்டியை அடரிடப் பயன்படும் பதார்த்தங்கள் எவை?

04. உள்ளே அடைக்கப்பட்டுள்ள பொருட்கள் வெளியே தெரியக்கூடிய விதமாக இருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படும் பொதி யாது?

05. பல்படை பொதியிடல் ஊடகத்திற்கு உதாரணம் தருக?

06. செயற்கை பொதியிடு பதார்த்தத்திற்குஅதிகளவில் பயன்படும் உலோகம் யாது?

07. கிருமியழிக்கப்பட்ட நிலமையின் கீழ் பொதியிடப்படும் உணவிற்கு உதாரணம் தருக?

08. சுட்டுத்துண்டில் (லேபல்) UHT என பொறக்கப்பட்டுள்ளதுடன் திறந்த பின் அதனை குளிரூட்டியில் வைக்கவேண்டுமென குறிக்கப்பட்டிருந்தது. இதில் அடங்கிய உணவு யாதாக இருக்கும்?

பகுதி 11

01. பொதியிடல் என்றால் என்ன?
02. உணவு பொதியிடலின் முக்கியத்துவங்கள் ஐந்து தருக?
03. பண்டைய கால மக்களின் உணவு பொதியிடல் பதார்த்தங்கள் எவை?
04. உணவு பொதியிடப் பயன்படும் இயற்கை பொதியிடல் பதார்த்தங்கள் எவை?
05. பொதியிடப் பயன்படும் தாவர இலைகளுக்கு உதாரனம் தருக?
06. பொதியிடு பதார்த்தமாக கடதாசியை பயன்படுத்துவதன் பிரதிகூலம் இரண்டு தருக?
07. கடதாசி கொண்டுள்ள மேற்படி பிரதிகூலமான இயல்புகளை நீக்கி பொருத்தமான பொதியாக மாற்ற மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மூன்று தருக?
08. காட்போட் பொதிகளை பயன்படுத்துவதன் அனுகூலம் நான்கு தருக?
09. செயற்கை பொதியிடு பதார்த்தங்களுக்கு உதாரணம் நான்கு தருக?
10. பொதியிடு பதார்த்தமாக கண்ணாடி பயன்படுத்துவதன் அனுகூலம் இரண்டு தருக?
11. பொதியிடு பதார்த்தமாக கண்ணாடி பயன்படுத்துவதன் பிரதிகூலம் இரண்டு தருக?
12. விசேட நிலமைகளின் கீழ் உணவை பொதியிடும் மூன்று முறைகளும் எவை?
13. மிதப்படுத்தப்பட்ட அகச்சூழல் நிலமைகளின் கீழ் பொதியிடல்ன் அனுகூலம், பிரதிகூலங்களை குறிப்பிடுக.
14. சுட்டித்துண்டிடல் என்றால் என்ன?
15. உணவுக்கு சுட்டித்துண்டிடலின் முக்கியத்துவம் மூன்று தருக?
16. சுட்டித்துண்டில் காணப்பட வேண்டிய அடிப்படை விடயங்கள் மூன்று தருக?

| | |
|---|---|
| | வலயக்கல்வி அலுவலகம், வவுனியா தெற்கு - வவுனியா<br>துரித விசேட செயற்றிட்டம் க.பொ.த (சாதாரன தரம்) – 2017<br>விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் |
| செயலட்டை -10 | தரம் - 11 |

## உணவின் தரம்

பகுதி 1

01. உணவின் தரம் என்பது யாது?
02. உணவில் கலப்படம் செய்யும்போது நுகர்வோருக்கு ஏற்படும் நோய்கள் எவை?
03. புலனுணர்வு தன்மையை மதிப்பிடும் ஆய்வு கூடத்தை பேணும் வெப்பநிலை வீச்சு யாது?
04. தர நியமங்களின் வகைகளையும் அவற்றிற்கான உதாரணங்களையும் தருக?

பகுதி 11

01. உணவில் கலப்படம் செய்தல் என்றால் என்ன?
02. உணவில் கலப்படம் நடைபெறும் சந்தர்ப்பங்கள் ஐந்து தருக?
03. உணவில் கலப்படம் செய்வதால் நுகர்வோருக்கு ஏற்படும் சுகாதாரப் பிரச்சினைகள் எவை?
04. நீர் கலக்கப்பட்ட பாலை எவ்வாறு இனங்காணலாம்?
05. உணவின் புலனுணர்வுத் தன்மை மதிப்பீட்டின் முக்கியத்துவம் யாது?
06. உணவின் புலனுணர்வுத் தன்மையை சோதிப்பதற்கான இரு பிரதான நிலமைகளும் எவை?
07. உணவின் தரங்களின் முக்கியத்துவம் யாது?
08. வெளிநாட்டு சந்தைக்கு பொருட்களை அனுப்பும் போது சர்வதேச தரக்கட்டுப்பாட்டு சான்றிதழ் எவ்வாறு குறிப்பிடப்படும்?
09. சந்தையில் கலந்திளக்கம் (கலப்படம்) செய்யப்பட்ட உணவுகளை உண்பதனால் மனிதனுக்கு ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சினைகள் இரண்டைக் குறிப்பிடுக?
10. கோதுமை மா கலக்கப்பட்ட பால்மாவை எவ்வாறு இனங்காணலாம்?
11. மிளகு வித்துக்களுடன் பப்பாசி வித்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்பதை நீர் எவ்வாறு வேறுபிரித்து காட்டுவீர் என்பதை சுருக்கமாகத் தருக?